மாநகர [illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

## ★ 'றோ' ஆலோசகர்கள் இலங்கைபடைக்கு உதவி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 28 இதழ் 152
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 12 — 07 — 1992

(சென்னை)
விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கைப் படைகள் மேற்கொண்டுவரும் ராணுவ நடவடிக்கைக்கு இந்திய புலனாய்வுத் துறையான 'றோ' ஆலோசனை வழங்கி வருவதாக தமிழக சஞ்சிகையான 'நக்கீரன்' அம்பலப்படுத்தி

(4ம் பக்கம் பார்க்க)

## ஒப்பரேஷன் பலவேகய 2 தாக்குதல் பூர்த்தி

(கொழும்பு)
ஒபரேஷன் பலவேகய 2 இராணுவ நடவடிக்கை முற்றுப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
வெற்றிலைக்கேணி முதல் ஆனையிறவு வரையிலான

[4ம் பக்கம் பார்க்க]

## 14 நாள் போரில் 199 படையினர் பலி

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் கடந்த ஜூன் மாதம் 28ம் திகதி முதல் நடைபெற்ற 14 நாள் போரில் 199 படையினர் கொல்லப்பட்டு 280 க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம்

[4-ம் பக்கம் பார்க்க]

## ★ புலிகளால் கட்டுப்பொத்த

# ராணுவ முகாம் முற்றாக அழிப்பு!

# 47 படையினர் ஸ்தலத்தில் பலி

## 100 நவீன ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா, மன்னார், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் எல்லையிலுள்ள கட்டுபொத்த இராணுவ முகாம் நேற்று அதிகாலை விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டதில் 47 இராணுவத்தினர் பலியானார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட நவீன ரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஆறு புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்று அதிகாலை மூன்றுமணியளவில் திடீரென விடுதலைப் புலிகளினால் இம்முகாம் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தாக்குதல் தொடுக்கப்பட்டது. புலிகளின் தாக்குதலினால் முகாமிலிருந்த படையினர் சிதறி ஓடத்தொடங்கினார்கள். இதனால் பல இராணுவத்தினர் ஸ்தலத்திலே பலியானார்கள் பலர் காயமடைந்தனர்.

## கவசவாகனங்கள் அழிப்பு

அரை மணித்தியாலத்தின் பின்னர் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இம்முகாம் கொண்டுவரப்பட்டதை அடுத்து முகாமிலிருந்த நூற்றுக்கும் அதிகமான நவீன ரக ஆயுதங்கள் பல புலிகளால் கைப்பற்றப்பட்டதுடன் அங்கிருந்த இரு பவள் கவச வாகனங்களும், ஒரு புல்டோசரும் புலிகளால் அழிக்கப்பட்டன

## காட்டினுள் தப்பியோட்டம்

புலிகளின் இத்திடீர் முற்றுகையையடுத்து பல இராணுவத்தினர் காடுகளுக்குள் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுவதுடன் பலர் காணாமல் போயுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இம்முகாமில் நிலைகொண்டுள்ள படையினர் நவீனரக ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் அவையாவும் தாக்குதலை தொடர்ந்து புலிகளிடம் பறிகொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மீட்புப்படை மீது தாக்குதல்

இந்த இராணுவ முகாமில் புலிகளின் தாக்குதலுக்குள் சிக்கியுள்ள இராணுவத்தினரை மீட்கவென தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் சகிதம் கட்டுப்பொத்த விரைந்த படையினர் மீது விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி தாக்குதலைத் தொடுத்தது. இத்தாக்குதலில் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதுடன் இரு கவசவாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

## ஆறு புலிகள் வீரச்சாவு

கட்டுப்பொத்த இராணுவ முகாம் தகர்ப்பின்போது ஆறுபுலிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். இத்தாக்குதலில் சுமார் 800 புலிகள்வரை ஈடுபட்டதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்தது.

## பல படையினரை காணவில்லை

கட்டுப்பொத்த இராணுவமுகாம் வில்பத்து சரணாலயத்திற்கு அருகில் உள்ளது.

கட்டுப்பொத்த இராணுவ முகாம்மீது தாக்குதல் நடைபெறுவதற்கு முன் 101 இராணுவத்தினர் இருந்ததாகக கூறப்படுகிறது. தாக்குதலின் பின்னர் அநேக இராணுவத்தினர் காணமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முகாம் தீமூட்டி எரிப்பு

தாக்குதல் முடிவுற்ற பின்னர் விடுதலைப் புலிகள் முகாமிற்கும், முகாமைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு தீமூட்டிச் சென்றுள்ளதாகவும் அந்த இடத்திற்கு மேலதிக படையினர் விரைய அநேக மணித்தியாலமும், மிகவும் கஷ்டபட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

[4-ம் பக்கம் பார்க்க]

## மேலதிக படையணி வில்பத்து விரைவு

(கொழும்பு)
வில்பத்துசரணாலயப் பகுதிகட்டுப்பொத்த இராணுவ முகாம் நோக்கி மேலதிக படையணி அனுராதபுரத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது,

மேற்படி முகாமைப் பலப்

[4-ம் பக்கம் பார்க்க]

## பாத யாத்திரைக்கு பொலிசார் தடை

(கொழும்பு)
தம்புள்ளை கந்தலம உல்லாச விடுதி அமைக்கும் திட்டத்தை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட மாத்தளை-தம்புள்ளை பாதயாத்திரை நேற்று பொலிசாரினால் தடை செய்யப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## 'ஆயுதப் போர் மீண்டும்வெடிக்கும்'

[கொழும்பு]
பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கும் செயலில் அரசு ஈடுபடக்கூடாது. அரசு அப்படி முயற்சித்தால் மீண்டும் இளைஞர்கள் ஆயுதங்களை தூக்குவதை தடுக்க இயலாது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி நுவரெலியா

(4ம் பக்கம் பார்க்க)

## அதிகாரிகள் உட்பட 12 ராணுவம் கைது

(கொழும்பு)
முல்லைத்தீவு இராணுவ முகாமைச்சேர்ந்த சில இராணுவ அதிகாரிகள் உட்பட 12 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் முன்ஆஜர்செய்யப்பட்டுள்ளது

[4-ம் பக்கம் பார்க்க]

## தலைவர், செயலாளர் உட்பட யாழ். செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் ராஜினமா!

(யாழ்ப்பாணம்)
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் தலைவர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன், செயலாளர் திரு. எஸ். சிவானந்தராசா உட்பட 5 உறுப்பினர்கள் நேற்று இராஜினமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமாலை செஞ்சிலுவை சங்க யாழ் கிளை செயலகத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் இந்தஇராஜினமாகுறித்து தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ப் பகுதிகளில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இலங்கை

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய் பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள் மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6436)

### ஜோதிடம்-விஞ்ஞான கணிப்புக்கள்

சங்கரிதயாள் சர்மா, பிரேமதாசா, சதாம்ஹுஸைன் ஜனாதிபதி பதவிகளைத் தொடர்வார்கள். பிரேமதாசாவுக்கு அஷ்டமத்து வியாழனுடன் ஏழரை நடுக்கூறு மாரகச்சனி 1993-ல் தொடங்குகின்றது. யூலை 17ல் செவ்வாய் மாற்றம் 40 நாட்களுக்கு சண்டை உக்கிரமடையும். இராணுவ இழப்புக்கள் அதிகரிக்கும். Prof. சந்தியதாஸன், சித்தன் கேணிச் சந்தி. (சி6524)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப்பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 12-07-92 ஞாயிறு மு. ப 8-00, மு.ப. 11-00 மணிக்கு நடைபெறும். பதிவு செய்யவும். புலமைப்பரிசில் Paper Class சனி, ஞாயிறு பி. ப. 4-00-6-00 நடைபெறும் திறமையான மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219, நாவலர், வீதி, யாழ்ப்பாணம். (சி-6519)


## வீரவேங்கைக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்]

வாடியடிப் பகுதியில் இடம் பெற்ற மோதலில் வீரச்சாவு எய்திய வீரவேங்கை நகைமுகன் [கிச்சி] அருணகிரி சற்குணராசாவுக்கு யாழ்ப்பாணம் பிறவுண்வீதி மக்கள் கண்ணீர் அஞ்சலி தெரிவித்து நேற்று முன்தினம் முழுவதும் இப்பகுதியெங்கும் வாழைகள் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தது.

வீதிகள், சந்திகள் எங்கும் ஒலிபெருக்கி சோககீதம் இசைக்க இந்த அஞ்சலி முழு நாளும் அனுஷ்டிக்கப்பட்டது.


## தரன் ஸ்ருடியோ

அவசரமாக ★ றபர் சீல்கள் ★ பாஸ்போட் ★ அடையாள அட்டைகள் மற்றும் ★ கலர் படங்களுக்கும் ★ விளம்பர போட் எழுதுவதற்கும்:

தரன் ஸ்ருடியோ
189, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 6523)

புதிய தொழில் நுட்பத்துடன்
புதிய வடிவத்தில்
தற்போது தயாரிக்கப்படுகிறது

Tasty!
CHOCONUT
ஒன்றின் விலை ரூபா 2/-
உங்கள் வியாபாரிகளிடம்
கேட்டு வாங்குங்கள்

Taste Line Industries (pvt) Ltd.
No. 14, Seenior Lane, JAFFNA.
குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு
(ஏ 2285)


# சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு கடன் வசதிபெற ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுதாபனம் யாழ். நகரில் கடந்த வாரம் இயங்க ஆரம்பித்தது.

இராணுவ நடவடிக்கைகளினாலும்: வன்செயல்களினாலும் சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கு இந்தக்கூட்டுஸ்தாபனத்தில் பொது மக்கள் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990-ம் ஆண்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட குடும்ப அட்டையில் வீடுகள் திருத்துவதற்கு 50 ஆயிரம், ஒன்றரை லட்சம் ரூபா கடன் அடிப்படையில் பெறுவதற்கு அனுமதி பெற்றவர்களும் இந்த கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொள்ளலாமெனக் கூறப்படுகின்றது.

பொது மக்கள் தமது வீடுகளை திருத்திக்கொள்வதற்கு இந்தக் கூட்டுஸ்தாபனத்தில் கடன் வசதிகளைப் பெற தமது வீட்டு உறுதிகளை சமர்ப்பித்தும் கடன்களைப் பெறுவதற்கும், நிரந்தர சேமிப்பை ஆரம்பித்து கடன்களைப்பெறுவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் கூடமாகாணத்தில் முதலில் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கூட்டுஸ்தாபனக்கிளை. யாழ். வீடமைப்புச் செயலகத்தின் 1-ம் மாடியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [வி

## சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம்)

சித்திரப் பாடத்திற்கான கண்காட்சி ஒன்று யாழ்.சென் சாள்ஸ் வித்தியாலயத்தில் நேற்றிலிருந்து நடைபெற்று வருகின்றது.

யாழ் கோட்ட சகல பாடசாலைகளும் நல்லூர் கோட்டத்திலுள்ள ஒருசில பாடசாலைகளும் காட்சிக்கு தமது மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங்களை வைத்துள்ளன.

# சார்க் நாடுகளுக்கு ஜனதிபதி விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா சார்க் நாடுகளுக்கான விஜயத்தை செப்டம்பர் 25ந் திகதி ஆரம்பிக்கவுள்ளார்.

செப்டம்பர் 25ந் திகதியிலிருந்து அக்டோபர் 10ந் திகதிக்கு இடையில் சார்க் நாடுகள் முழுவதற்கும் ஜனாதிபதி பிரேமதாஸா விஜயம் செய்யவிரும்புகிறார். (மா)

## வர்த்தகப் பிரிவுக்கான கல்விக் கருத்தரங்கு

(பருத்தித்துறை)

யாழ். கல்வித் திணைக்கள வர்த்தகப்பிரிவும். புலோலி வடமராட்சி பட்டப்படிப்புகள் கல்லூரியும் இணைந்து க. பொ. த (உயர்) தரவகுப்பு மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளை நடாத்தவுள்ளன.

நாளை 13ம் திகதி ஆரம்பமாகும் இக்கருத்தரங்குகள் 30ம் திகதி வரை திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் புலோலியிலுள்ள வடமராட்சிப்பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (52)

## 135 அதிகாரிகள் பதவி நீக்கம்

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் 135 இராணுவ அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்துள்ளதாக அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஈராக்கில் நடைபெற்ற புரட்சியிலிருந்து ஈராக்கிய அதிபர் மயிரிழையில் உயிர் தப்பிவிட்டதாகவும் இப்புரட்சியை அடுத்தே மேற்படி பதவி நீக்கம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஈராக் அதிபரின் பதவி வெகுவிரைவில் கவிழ்க்கப்பட்டுவிடும் என்றும் அமெரிக்க தரப்பு செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (க)

# சுயவேலைவாய்ப்பு 2லட்சம் ரூ. ஒதுக்கீடு

[கொழும்புத்துறை;

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சுயவேலைவாய்ப்பைஊக்குவிக்கும் முகமாக யாழ் மாநகரசபை 2 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்பகுதியில் உள்ள சன சமூக நிலையங்களுக்கூடாகத் தொழிற்துறைத் திட்டங்களை மேற்கொண்டு சுயவேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படும் சன சமூக நிலயங்களுக்கு 5000 ரூபா வீதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## இராசி பலன்

12-07-1992
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு ஆனி 28)

திரயோதசி மு. இ. 10-20 வரை, கேட்டை பி ப. 5-24 வரை, மரணயோகம் இராகுகாலம் 4-29 முதல் 5-59 வரை சுபநேரம் காலை 8-59 முதல் 10-29 வரை. பிரதோச விரதம்.

மேடம்: அசாத்தியதுணிச்சல்,பகைவர் துன்பம்,செலவு.

இடபம்: காரிய பலிதம், பணப்புளக்கம், கல்வி ஞானம்.

மிதுனம்: சுபகாரியம், குடும்பசுகம், மனமகிழ்ச்சி.

கடகம்: கௌரவ பாதிப்பு மனைவிக்குப் பீடை, நீசர் நட்பு.

சிங்கம்: உறவினர் நச்சரிப்பு, கடன் சுமை, அலைச்சல்.

கன்னி: எதிர்பாராத பண வரவு, தொழில் சிறப்பு, உல்லாசம்.

துலாம்: சுகக் குறைவு, ஆசை நிராசையாதல், கடும் யோசனை.

விருச்சிகம்: பாராட்டும் சம்பவம், போசன பாக்கியம் புகழ்.

தனுசு: பணப்பிரச்னை, உறவினர் சச்சரவு, வெறுப்பு.

மகரம்: காரிய ஜெயம், அதிக வருமானம், கண்டிப்பு.

கும்பம்: வார்த்தைக்குக் கட்டுப்படல், தொழில் சிறப்பு தானதருமம்.

மீனம்: நோய்நொடி, பயணக் களைப்பு, மனச்சுமை.

—ஜோஸ்யர்


## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு
26-04-1949

அநியாய அழிப்பு
12-07-1989

திதி
12-07-1992

### அமரர் வில்லியம் ஜெயராஜா

(நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்)

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்தில் எனக்காகத் தேவனை வேண்டுங்கள்"

அன்பின் தெய்வமே! உங்கள் பிரிவால் உள்ளம் உடைந்து கண்ணீர் ஊற்றுகின்றோம். உங்கள் அன்பின் உருவமும் சொல்லும் எங்கள் இதயத்தில் என்றுமே இடம்பெற்றிருக்கும். உங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, ஆசை மகள்
பெற்றோர், சகோதரர்கள்
மாமா, மைத்துனர்மார் உறவினர்கள்

சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.
(சி-6521)

தமிழீழத்தில்

# வீடியோ படங்கள் திரையிடப்படுவதற்கான கட்டுப்பாடுகளும் புதிய விதிமுறைகளும்

(யாழ்ப்பாணம்)

வீடியோத் திரைப்படங்கள் திரையிடுவதற்கான கட்டுப்பாடுகளையும் புதிய விதிமுறைகளையும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மையப் பணியகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் அறிவித்துள்ளது அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பெரும் போரைச் சந்தித்து எம் தாயகம் துடித்துக்கொண்டிருக்கின்றது விடுதலையை அவாவி நிற்கும் மக்களும் போராளிகளும் போர்க்களங்களிலும் தயாரிப்பு வேலைகளிலும் ஓய்வின்றிப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான மக்கள் இந்தப் போராட்டத்தை தங்கள் போராட்டமாகவே கருதி, அவலங்களுக்கு மத்தியிலும் நிலைநிமிர்ந்து நிற்கின்றனர். அனல் குறைந்த தொகையினரான ஒரு கூட்டம் இந்த மண்ணை ஒரு கேளிக்கை நிலமாக கருதி எம் மக்களின் வாழ்நிலையையும், விடுதலைப்போரையும் எச்சப்படுத்த எத்தனிக்கின்றனர். வீடியோத் திரைப் படங்கள் மூலமும் கலைநிகழ்வுகள் என்ற போர்வையில் காலத்திற்கொவ்வாத கருத்துக்களையும் மக்கள்மனங்களில் விதைக்க முற்படுகின்றனர்.

மக்களின் தனிமனித உணர்வுகளையும், கருத்துக்களையும் பெரிதும் மதிக்கும் நாங்கள் எங்கள் உயிரினும் மேலான போராட்டத்திற்கு ஊறு விளைக்கும் எந்த நிகழ்வுகளையும் அனுமதிக்கப்போவதில்லை சீரழிவுக் கருத்துக்களைச் சிந்தி மலிவான உணர்வுகளுக்குத் தீனி வழங்கும் தென்னிந்தியத் திரைப்படங்களையும், உலகெங்கும் தடைசெய்யப்பட்டுள்ள ஆபாசப்படங்களையும் தமிழீழத்தில் திரையிடுவதனால் ஏற்படும் ஆபத்துக்களை அவதானித்துள்ளோம். எனவே சமீபகாலமாக தளர்த்தியிருந்த கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்ப்படுத்த எண்ணியுள்ளோம். இதன்படி வீடுகளில் அவ்வில்லங்களுக்குரிய உறுப்பினர்கள் மட்டும் அமர்ந்து முற்றுகத்தடை செய்யப்பட்ட திரைப்படங்கள் தவிர்ந்த ஏனைய திரைப் படங்களை பார்வையிடுவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. ஆனல் உள்அரங்காகவும், சிறிய தியேட்டர்களாகவும் வீடுகளை உருவாக்கி பணவருவாயைக் கருத்திற்கொண்டு வீடியோப் படங்களைக் காண்பிப்பது இன்று முதல் முற்றுகத்தடை செய்யப்பட்டுள்ளது குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பார்வையிடுவதாகவும், குடும்ப மங்கள நிகழ்வு வீடியோப் படங்கள் மட்டுமே பார்வையிடுவதாகவும் கூறிக் கொண்டு ஓரிடத்தில் தினசரி பலர் கூடிய பணவருவாயைக் கருத்திற்கொண்டு வீடியோப் படங்களைத் திரையிடுவது எமது கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. இப்படியான ஏமாற்றுத்திரையிடுதல்கள் இன்று முதல் முற்றாகவே தடை செய்யப்படுகின்றது.

கோவில் திருவிழாக்களை முன்னிட்டும், சனசமூக நிலையங்கள், மற்றும் சமூக பொது அமைப்புக்களின் விழாக்கள என்று கூறிக்கொண்டும் திறந்தவெளிகளில் வீடியோத் திரைப்படங்கள் திரையிடுவதும் இன்று முதல் தடைசெய்யப்படுகின்றது.

பக்திப்படங்கள் என்றும் புரட்சிப்படங்கள் என்றும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு, மக்களையும் ஏமாளிகளாக்கும் வீடியோப்படங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இன்றும் சிலர் ஆங்காங்கே அறைகளில்கூடி உலகெங்கும் தடைசெய்யப்பட்டுள்ளஆபாசமான, பாலுறவு சம்பந்தமான ஆங்கிலத் திரைப்படங்களையும் மலிவான மனித உடலிச்சைகளைத் தூண்டும் படங்களையும் பார்வையிட்டு வருவது எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்று முதல் இவை தடை செய்யப்படுவதுடன் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் ஒளிபரப்புச் சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும்.

ஒளிபரப்புச் சாதனங்களையும், மின்சார உபகரணங்களையும் வாடகைக்கு விடும் தனி நபர்களோ. நிறுவனங்களோ இவ்விதிமுறைகளை நன்குணர்ந்து தடைசெய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு தங்கள் சாதனங்களை வாடகைக்கு கொடுக்கவேண்டாமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். மீறுவோரின் சாதனங்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் மீள ஒப்படைக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

எம் மண்ணின் நலன் கருதியும், எம் புனிதப்போரின் பெருமானம் கருதியும் நல்ல தலைமுறையொன்றை உருவாக்கவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் பேரவல் கருதியும் விதிக்கப்படும் சரியான இந்த விதிமுறைக்கு அமைய நடந்து நட்டுககும் உங்களுக்கும் எமக்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## சென்னையில் உலக திருக்குறள்மாநாடு

(கொழும்புத்துறை)

உலகத்திருக்குறள் மாநாடு 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற ஏற்பாடுகள் நடை பெற்று வருகிறது.

இம்மாநா டின் ஆய்வுக் கருப்பொருள் "உலக மக்கள் ஒன்றுபட்டு இன்புற்று வாழ்வதற்கு அறிவியல் அடிப்படையில் தமிழ் மறைகாட்டும் வழி" என்பதாகும்.

திருக்குறள், திருவள்ளுவர் தொடர்பாக ஆய்வரங்குகளும் அப்போது நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## ☆கார் - ஆட்டோ மீது லொறி மோதியதில் 9 பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழகத்தில் ஸ்ரீபெரும் புத்தூர் அருகே இடம்பெற்ற விபத்தொன்றில் ஒன்பது பேர் உயிரிழந்தனர், 20 பேர் படுகாயமடைந்தனர்.

மாம்பாக்கம் அருகே ராங்கர் லொறி ஒன்று கார் ஒன்றுடனும், ஆட்டோ ரிக்ஷா ஒன்றுடனும் நேருக்கு நேர் மோதியபோதே இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

இவ்விபத்தில் 3 பெண்களும் கொல்லப்பட்டனர் காயமடைந்த இருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் உயிரிழந்தனராம்.

படுகாயமடைந்தவர்களில் பலர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

## கொலம்பியா விண்கலம் வெற்றிகரமாக திரும்பியது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் விண்வெளிக் கலமான கொலம்பியா, 14 நாட்கள் தனது விண்வெளிப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

2 பெண்கள் உட்பட 7 விஞ்ஞானிகளுடன் கடந்த மாதம் 25-ம் திகதி விண்வெளிக்குச் சென்ற இந்த விண்வெளிக் கலம், 221 தடவைகள் பூமியைச் சுற்றியபோது 57 லட்சம் மைல்கள் பயணம் செய்துள்ளது.

விண்வெளிக்கு உல்லாசப் பயணிகளைக் கொண்டு செல்லலாமா என்பதைத் தெரிந்து கொள்ளும் முகமாகவே மேற்படி பயணம் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

## ஈராக்அதிபர்கொலை முயற்சி படுதோல்வி

(பாக்தாத்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒன்று தோல்வியடைந்துள்ள தாக அறிவிக்கப்படுகிறது.

இது குறித்த செய்தியை 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்;

சதாம் ஹுசைனின் இராணுவத்திலுள்ள ஒரு பிரிவினரே இக்கொலை முயற்சியை மேற்கொண்டதாகவும் எனினும் இறுதி நேரத்தில் அது முறியடிக்கப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஜூன் 29-ம் திகதி இச்சதித் திட்டம் நிறைவேற்றப்படவிருந்தது. காரில் போகும் போது சதாம் ஹுசைன் படுகொலை செய்யப்படவிருந்ததால், அத்திட்டத்தை ஹுசைனின் ஆதரவுப் படை கண்டு பிடித்து காரில் பயணம் செய்யவிடாது அவரை காப்பாற்றியுள்ளது. (சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியகலாநிதி திரு. வ. சின்னப்பு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணி தொடக்கம் பகல் 2-00 மணிவரை உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் வேதாந்த சித்தாந்த விரிவுரைகளை நிகழ்த்துவார்.

0 0 9

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களத்துக்குப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள திரு. ப. சண்முகராசாவுககு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரிவுபசார விருந்து வைபவம் ஒன்றினை நடத்துகின்றனர்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கமும் கலந்து கொள்வார். [139)

0 0 0

(உடுப்பிட்டி)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இன்று 12ம் திகதி விநாயகர் தருமநிதிய இலவச வெளியீடான அறமவளர் இளம் தமிழ் சிறுவர் சஞ்சிகை வெளியீட்டு விழாவும் அறந்தமிழ் ஞானம் சஞ்சிகை ஆய்வரங்கும் நடைபெறவுள்ளது.

[150-56]

0 0 0

(யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்தின் நிர்வாகசபைக் கூட்டம் இன்று 12ம் திகதி காலை 10 மணிக்கு அத்தியடியிலுள்ள மேற்படி கழக தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் மாதாந்த சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் கே. குணராஜாவின் வாசஸ்தலத்தில் நடை பெறும்.

இன்றைய சந்திப்பின் போது சாகித்திய அக்கடமி பரிசு பெற்ற கிராமத்துப் படைப்பாளி ரி. இராஜநாராயணனின் எழுத்தாணி குறிப்புப்பற்றி ஆராயப்படும்.(எஸ்)

## இரத்ததானம்

[யாழ்ப்பாணம்]

தற்போது ஏற்பட்டிருக்கும் போர்க்காலகட்டத்தில காயப்பட்டு வருபவர்களுக்கு உடனடியாக இரத்தம் தேவையாக இருக்கின்றது.

யாழ் போதன வைத்தியசாலையில் தற்போது இரத்த வங்கியில் இரத்த பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதனல் இரத்தம் வழங்குபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொண்டு இரத்ததானம் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (56)

பிரபா விவகாரம்:

## சட்ட விதிகளுக்கமைய இலங்கை நடந்துகொள்ளும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவுக்கு நாடுகடத்தும் விடயம் தொடர்பாக இலங்கையின் சட்ட விதிகளுக்கமைய இலங்கை அரசு நடந்து கொள்ளும் என இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்திய வெளியுறவு இணையமைச்சர் எட்வர்டோ பெலரோவிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற 'சார்க்' வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாக இலங்கை வந்தபோது இந்திய வெளியுறவு இணையமைச்சரிடம் மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டது. (க)

## இவ்வருடத்திற்கான சிறந்த தமிழர் தொண்டாவுக்கு 'விருது'

(சென்னை]

இலங்கை உல்லாசப் பிரயாண கிராமியதொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமானுக்கு இவ்வருடத்திற்கான சிறந்த தமிழர் என்ற விருது வழங்கப்படவிருக்கிறது.

மேற்படி விருதினை வழங்கும் முயற்சிகளில் தமிழக புத்திஜீவிகள் அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

கடந்த அரை நூற்றுண்டுக்கு மேலாக மலையக தோட்டத் தொழிலாளர்களுக்காக இவர் சேவையாற்றி வருவதனையொட்டியே மேற்படி விருது வழங்கப்படவிருக்கிறது.

சென்னை அடையாறு பூங்காவில் உள்ள பிரபல ஹோட்டலில் எதிர்வரும் 15ம் திகதி புதன்கிழமை நீதிபதி வேணுகோபாலன் தலைமையில் மேற்படி வைபவம் இடம்பெறும்

பாராட்டுப்பத்திரம், தங்கப்பதக்கம் மற்றும் இந்திய நாணயத்தில் 10 ஆயிரம் ரூபா ஆகியன வழங்கப்படும். (க)

# யாழ். மாவட்டத்தில் போதியளவு மண்ணெண்ணை கையிருப்பில் உள்ளது

## மக்களுக்கு விநியோகிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டத்தில் போதியளவு மண்ணெண்ணை கையிருப்பிலுள்ளது. இதனை வைத்திருப்போர் உடனடியாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யுமாறு யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வடமாகாணத்திலுள்ள மண்ணெண்ணை விநியோகத்தர்களுக்கு போதியளவு மண்ணெண்ணையை அனுப்பிவைத்துள்ளதாக கொழும்பிலுள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த மேமாதம் மட்டும் யாழ்ப்பாணத்துக்கு 8 85,780 லீட்டர், கிளிநொச்சிக்கு 3 59 100 லீட்டர், முல்லைத்தீவுக்கு 2,41,600 லீட்டர், மன்னாருக்கு 9.450 லீட்டர் மண்ணெண்ணையை பெற்றோலியக் கூட்டுததாபனம் மேற்படி மாவட்டங்களிலுள்ள விநியோகத்தர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஜூன் மாதம் அனுப்பிய புள்ளி விபரங்கள் அடுத்த வாரம் வெளியிடப்படும். ஆகவே பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமுன் தங்களிடமுள்ள மண்ணெண்ணையை உடனடியாக பொதுமக்களுக்கு விநியோகிக்கும்படி அரச அதிபர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வி)

# யாழ். குடாவில் 20 படையினர் பலி

[லண்டன்]

யாழ்.குடாவில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மோதலில் 20 படையினர் பலியானதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக நேற்று நள்ளிரவு பி பி.ஸி. தெரிவித்தது.

கடந்த மூன்று வாரத்தில் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற மோதலில் 250 பேர் வரைஉயிரிழந்ததாகவும் இராணுவவட்டாரங்களை ஆதாரம் காட்டி பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

# கூட்டுப் படைதலைமையகம் மீது குற்றச் சாட்டு

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தம் தொடர்பான உண்மையான செய்திகளை கூட்டுப்படை தலைமையகம் வெளியிடுவதில்லை என்று கொழும்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இச் சண்டைகளில் கொல்லப்படும் இராணுவ எண்ணிக்கை உட்பட முழுதொடர்பாக பல தகவல்களை கூட்டுப்படைத் தலைமையகம் இதுவரையும் சரியாக வெளியிடவில்லை.

கொழும்பிலுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் போர் நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு உண்மைச் செய்திகள் வெளிவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென கொழும்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (மா-ரி)

## தவறுக்காக வருந்துகின்றோம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் [10-7-92] பத்திரிகைகளில் வெளிவந்த வீரச்சாவு விபரத்தில், கலைக்கோன் (அப்புதுரை பிரபாகரன்) புத்தூர் வீதி, அச்செழு, நீர்வேலி. என்ற போராளியின் விபரம் வீரச்சாவு எனத் தவறுதலாக எம்மால் வெளியிடப்பட்டது. இத்தவறான செய்திக்கு வருந்துகின்றோம் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை கடற்படையினர் சூடு; 6 இந்திய மீனவர் படுகாயம்

## இருவரைக் காணவில்லை

(சென்னை)

கச்சதீவுப் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 6 மீனவர் படுகாயமடைந்தனர். இருவரைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு கடலில் நேற்று முன்தினம இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வள்ளங்களில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள்மீதே இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளது.

காணுமல் போன இரு மீனவரையும் இந்திய கடற்படை தேடி வருகிறதாம். இவ்விருவரும் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. (சி)

### 14 நாள் போரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த இரு வாரத்திலும் வடக்கு-கிழக்கில் பல பகுதிகளிலும் பெரும்போர் நடைபெறறதாகவும் அப்போர் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

அண்மைக் காலத்தில் இராணுவத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி-மா)

### ஒப்பரேஷன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொட்டல் வெளிகளில் ஒரு இராணுவ வீதியை அமைப்பதை நோக்கமாகக்கொண்டு கடந்த இரு வாரமாக இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

இப்போரில் 100 க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்ததுடன் 10 கவச வாகனங்கள் 3 டாங்கிகளும், வை-8 ரக விமானமும் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### தலைவர், செயலாளர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் தொண்டர் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சாவதேச செஞ்சிலுவைச்சங்க உதவிகள் தமது கிளைக்குவழங்கப்படாத காரணத்தினால் தாம் இராஜினாமா செய்வதாக யாழ் கிளைத் தலைவர் டாக்டர் நச்சினார்க்கினியன் தெரிவித்தார். [75]

# தொழில்நுட்ப கல்லூரி பரீட்சை நடாத்துமாறு மாணவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தடைபட்டிருக்கும் தமது பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கு ஆவன செய்யும்படி யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று யாழ் அரச அதிபரைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்.

வரைவாளர் பரீட்சைக்கான வினாத்தாள்கள் பலாலி இராணுவ முகாமில வைக்கப்பட்டு இருப்பதினால் இலங்கை முழுவதும் ஒரே நேரத்தில் கடந்த வாரம நடந்த இப் பரீட்சையை தாம் எழுத முடியாது போய்விட்டதாகவும், இப்பரீட்சையை மீண்டும் யாழ் நகரில் நடாத்துவதற்கு ஆவன செய்யுமாறும் கேட்டுள்ளனர். (வி)

# வடக்கு-கிழக்கு இணைப்பை சு.க. தொடர்ந்து எதிர்க்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பை தொடர்ந்தும் சுதந்திரக்கட்சி எதிர்க்குமென கட்சித் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்ந்தும் வலியுறுத்தப்படுவதையடுத்தே கட்சித் தலைமைப்பீடம் மீண்டும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாம்.

அண்மையில் தமிழ்க் கட்சிகள் முன்வைத்த நான்கு அம்சத் திட்டங்களை சுதந்திரக்கட்சி நிராகரித்ததுடன் இவ்வாறானதொரு இணைப்பு பிரச்னையை மேலும் சிக்கலாக்குமென தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. [சி-க]

### ‘றோ’ ஆலோசகர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளது.

‘நக்கீரன்’ மேலும் தகவல் தருகையில்;

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு தீவிர நடவடிக்கை எடுப்பதற்காக 142 உயர் இராணுவ ஆலோசகர்கள் இலங்கைக்கு விமான மூலம் அனுப்பி வைத்துள்ளாராம்,

இவ்வதிகாரிகள் இந்திய புலனாய்வுத்துறை (றோ) இந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவில் தேர்வு செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் அனைவரும் விதடுலைப்புலிகளுக்கு எதிரான கருத்துடையவர்களாவர்.

இவர்கள் தனி விமானத்தில் இலங்கை வந்து ஜனாதிபதி பிரேமதாசா, கூட்டுப்படைத்தளபதி ஹமில்டன் வனசிங்காவையும் மற்றும் பல தளதிகளையும் சந்தித்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளது. (எஸ்)

### பாதயாத்திரை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுமாலை மாத்தளை நகரசபையிலிருந்து ஆரம்பமாகவிருந்த பாதயாத்திரையை பொலிசார் தடைசெய்தனர்.

மாத்தளை நகரில் நேற்று 6000 பொலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டதாக கூறப்படுகிறது மாத்தளை நகருக்குள் நுழையும் பாதைகள் யாவும் நேற்று மாலை பொலிசாரினால் மூடப்பட்டிருந்தது.

பாதயாத்திரை தடுக்கப்பட்டபின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம. பிக்கள் மாத்தளை நகரசபைக்கு அண்மையிலுள்ள டௌத்த விகாரையில் சத்தியாக்கிரகம் செய்தார்கள்.

பாதுகாப்பு நிலைமைக்காக இந்த பாதயாத்திரை தடைசெய்யப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கிறார்கள்.

பாதயாத்திரையில் பங்குபற்றுவதற்காக பெருந்தொகையான மக்கள் வந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. [மா]

## அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்விப்பணிப்பாளர் பணிமனையில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 2ம் தவணைப் பரீட்சை, ஆண்டிறுதிப் பரீட்சை சம்பந்தமான கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களும் கலந்துகொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [மா]

### ஆயுதப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட எம். பி. எஸ் டி. திசநாயக மாத்தளை விகாரையில் நேற்று உரையாற்றும் போது தெரிவித்தார்,

மாத்தளை – தம்புள்ளை பாதயாத்திரை தடுக்கப்பட்ட பின்னர் இந்த கூட்டம் மாத்தளை விகாரையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. [மா]

### மேலதிக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தும் நோக்கிலேயே இப்படைப்பிரிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படையணியில் நூற்றுக்கணக்கான படையினர் செல்வதாகவும் தெரியவருகிறது.

## உலக சனத்தொகை 550 கோடி

(புதுடில்லி)

இன்றைய உலகத்தின் சனத்தொகை 550 கோடி என ஐ. நா.வின் மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

2025ம் ஆண்டில் சனத்தொகை கூடிய நாடான சீனாவை இந்தியா மிஞ்சிவிடக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### அதிகாரிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த அடகு நகைகளில் ஒரு பகுதி மாயமாக மறைந்ததையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்மீதான விசாரணை அடுத்த சில தினங்களில் ஆரம்பமாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

புலிகளால் கட்டுப்பொத்த (1-ம் பக்கத் தொடர்ச்சி)

# விமானங்கள் கண்காணிப்பு

அனுராதபுரத்திலிருந்து 25 மைல் தூரத்தில் அமைந்துள்ள இம் முகாம்பகுதியிலுள்ள காடுகளின் மேலாக ஹெலிகொப்டர்களும் விமானப்படை விமானங்களும் நேற்று கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன.

காடுகளில் தப்பியோடிய படையினரை மீட்கும் முயற்சியில் பாதுகாப்பு படையினர் தற்போது ஈடுபட்டுவருவதாக கூறப்படுகிறது. (சி-ரி-மா-சு)

# புலிகளின் புதிய போர் உத்தி

(கொழும்பு)

புலிகளின் தற்போதைய போர் உத்தி இலங்கைப் படைகளுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

நேற்று அதிகாலை நடைபெற்ற தாக்குதலை படையினர் எதிர்பார்த்திருக்காததும் மற்றும் எங்கெங்கு புலிகள் எப்படித்தாக்குவார்கள் என்பதும் புரியாத நிலையில் படையினர் இருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

இவ் வருடத்தில் தனியொரு தாக்குதலில் அதிக படையினர் உயிரிழந்தது நேற்றைய தாக்குதலில்தான் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8